**செய்தி வெளியீடு எண்: 024** **நாள்: 05.01.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (5.1.2018) தலைமைச் செயலகத்தில், தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளையொட்டி அரிசி குடும்ப அட்டை உடைய குடும்பங்கள், காவலர் குடும்ப அட்டை பெற்றுள்ள காவலர் குடும்பங்கள் மற்றும் முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர் குடும்பங்கள் ஆகிய 1 கோடியே 84 லட்சம் குடும்பங்கள் பயன்பெறும் வகையில், ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, 20 கிராம் முந்திரி, 20 கிராம் உலர்ந்த திராட்சை, 5 கிராம் ஏலக்காய் மற்றும் இரண்டு அடி நீளக் கரும்புத் துண்டு ஆகியவை அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பினை வழங்கிடும் அடையாளமாக 7 குடும்பங்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பினை வழங்கி துவக்கி வைத்தார்கள்.

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை ஏழை, எளிய, சாமானிய மக்கள் சீரோடும், சிறப்போடும் கொண்டாடும் வகையில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, அரிசி குடும்ப அட்டை உடைய குடும்பங்கள், காவலர் குடும்ப அட்டை பெற்றுள்ள காவலர் குடும்பங்கள் மற்றும் முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர் குடும்பங்கள் ஆகியோருக்கு ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, முந்திரி, உலர்ந்த திராட்சை, ஏலக்காய் மற்றும் இரண்டு அடி நீளக் கரும்புத் துண்டு ஆகியவை அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு, பொங்கல் திருநாளுக்கு முன்னரே நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 29.12.2017 அன்று அறிவித்தார்கள். இந்தச் பொங்கல் பரிசுத் தொகுப்பினை வழங்கிட தமிழ்நாடு அரசு 210 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

அதன்படி, பொங்கல் திருநாளை முன்னிட்டு, தமிழகத்தில் உள்ள அரிசி குடும்ப அட்டை உடைய குடும்பங்கள், காவலர் குடும்ப அட்டை பெற்றுள்ள காவலர் குடும்பங்கள் மற்றும் முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர் குடும்பங்கள் ஆகிய 1 கோடியே 84 லட்சம் குடும்பங்கள் பயன்பெறும் வகையில், ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, 20 கிராம் முந்திரி, 20 கிராம் உலர்ந்த திராட்சை, 5 கிராம் ஏலக்காய் மற்றும் இரண்டு அடி நீளக் கரும்புத் துண்டு ஆகியவை அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பினை வழங்கிடும் அடையாளமாக 7 குடும்பங்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று வழங்கி துவக்கி வைத்தார்கள். அப்போது, மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் அவர்கள், அனைவருக்கும் இனிய தை பொங்கல் வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்று துவக்கி வைக்கப்பட்ட பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் திட்டம், நாளை (6.1.2018) முதல் அனைத்து மாவட்டங்களிலும் அந்தந்த மாவட்ட அமைச்சர் பெருமக்களாலும், மாவட்ட ஆட்சித் தலைவர்களாலும் வழங்கப்படும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. செல்லூர் கே. ராஜூ, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. ஆர். காமராஜ், தலைமைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு.க. சண்முகம், இ.ஆ.ப., கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் திரு.குமார் ஜெயந்த், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திருமதி எம். சுதாதேவி, இ.ஆ.ப., உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் திருமதி எஸ். மதுமதி, இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு. அ. ஞானசேகரன், இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) திரு.ஜி.கே. அருண் சுந்தர் தயாளன், இ.ஆ.ப., உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை துணைச் செயலாளர் திருமதி எஸ். வளர்மதி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**